[6th February 1959

Sri T. T. DANIEL : May I know whether any reservation is made for ex-servicemen and among those appointed, how many are ex-servicemen?

The Hon. Sri R. VENKATARAMAN : The number of ex-servicemen who registered themselves during this period is 3,666 and the number of ex-servicemen placed in employment during this period is 581.

* 64 *Q*.—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of persons registered in the Employment Exchanges in the Kanyakumari and Tirunelveli districts during the past one year;

(*b*) the number of persons for whom appointments were found through these Employment Exchanges.

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) The District Employment Office, Kanyakumari, was opened on the 1st March 1958. The number of applicants registered in the District Employment Office, Kanyakumari, during the period from 1st March 1958 to 31st October 1958 is 6,639 and in the District Employment Office, Tirunelveli, during the period from 1st November 1957 to 31st October 1958 is 13,608.

(*b*) The number of applicants placed in employment during the same period in District Employment Offices of Kanyakumari and Tirunelveli is 462 and 1,488 respectively.

Sri P. G. MANICKAM : இந்த வேலையில்லா திண்டாட்டத்தில் இருப்பவர்களுக்குள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை பதிவு செய்துக்கொள்ள வேண்டுமென்று முறை இருந்துவருகிறது அப்படி இருப்பதினால் மிகுந்த கஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு முறை பதிவு செய்துக்கொள்ளவேண்டுமென்று விதியில் ஒரு திருத்தத்தைக் கொண்டுவருவார்களா?

The Hon. Sri R. VENKATARAMAN : இப்படி மூன்று மாதத்திற்கு ஒரு முறை பதிவு செய்துக்கொள்வதால் வேலையில்லாமல் இருப்பவர்கள் எத்தனைபேர் என்பதை சரியாக கண்டுபிடிப்பதற்கு சௌகரியமாக இருக்கிறது. இதை 6 மாதத்திற்கென்று மாற்றினால் ரிஜிஸ்டர் 'அப்டுடேட்' ஆக இருக்காது. ஆகவேதான் அதை மூன்று மாதத்திற்கென்று வைத்திருக்கிறார்கள்.

Sri M. S. SELVARAJAN : பிரஸ்தாப காலத்தில் பதிவு செய்துக் கொண்ட வேலையில்லா ஆசிரியர்களின் தொகை எவ்வளவு என்பதை சொல்ல முடியுமா?

The Hon. Sri R. VENKATARAMAN : அந்தத் தகவல் ஒன்றுதான் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

Sri K. SATTANATHA KARAYALAR : கன்யாகுமரி ஜில்லாவில் வேலையில்லாது பதிவு செய்துக்கொண்டவர்களில், எத்தனை பேர் பழைய திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திலிருந்து Transfer செய்யப்பட்டார்கள் ?

The Hon. Sri R. VENKATARAMAN : I do not have that information, but generally, we do not take that information from the applicants. What we do is to get the facts about their qualifications and not about their prior registration.

6th February 1959]

SRI A. CHIDAMBARANATHA NADAR : கன்னியாகுமரி ஜில்லாவி லுள்ள எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்துகொண்டவர்களில் வேலை கிடைக்காதவர்களுக்கு மற்ற ஜில்லாக்களில் வேலை கொடுக்க முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : That would depend upon the nature of the employment.

SRI T. T. DANIEL : Out of the total number, how many were educated and how many were uneducated and among the educated, how many were absorbed?

THE HON. SRI R. VENKATARAMAN : We do not have the classification of 'educated' and 'uneducated'. But, we have the classification of graduates, under-graduates and others.

SRI K. SATTANATHA KARAYALAR : ராஜ்யப் புனரமைப்பின் போது திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்யப்பட பலர் சென்னை ராஜ்ய எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ் சேஞ்சிற்கு மாற்றப்பட்டு இங்கே அவர்களுக்கு மறு பதிவு அளிக்கப்பட்டதா ? அப்படியானால் அவ்வாறு இங்கே மாற்றப்பட்டவர்கள் எத்தனை பேர் ? அவர்களில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI K. VINAYAKAM : Is there any provision by which the Employment Exchange Office at Kanyakumari district can prevent those coming from the erstwhile Travancore-Cochin State from getting themselves registered for employment in our State as if they come from the Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member is suggesting something which is against the Constitution.

SRI A. VEDARATHNAM : ரெஜிஸ்டர் செய்துகொண்டவர்களில் பட்ட தாரிகள் எத்தனைபேர்? அவர்களில் எத்தனை பேருக்கு வேலை கிடைத் திருக்கிறது? அவர்களில் ஆண் பட்டதாரிகள் எத்தனைபேர்? பெண் பட்டதாரிகள் எத்தனை பேர்?

THE HON. SRI R. VENKATARAMAN : இது சம்பந்தமாக கன்னியா குமரி நீங்கலாக மாநிலம் பூராவிற்குமான புள்ளிவிவரங்கள் என்னிடம் இருக்கின்றன ; அவைகளைக் கொடுக்கிறேன்.

The number of graduates placed in employment is 914, the number of under-graduates placed in employment is 756, the number of women registered is 12,028 and the number of women placed is 2,004.

SRI K. SATTANATHA KARAYALAR : திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் ரெஜிஸ்டர் செய்து கொண்ட வர்களில் இலங்கையிலிருந்து வந்த அகதிகள் எத்தனை பேர் என்று கனம் அமைச்சர் சொல்ல முடியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : We have no information on that.